இலங்கைக்கான தனது பயணத்தின் முடிவில் ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் வோல்கர் டர்க் அவர்களின் அறிக்கை

கொழும்பு, 26 ஜூன் 2025

பிற்பகல் வணக்கம், உங்கள் வருகைக்கு நன்றி.

சுமார் மூன்று நாட்களுக்கும் மேலாக இலங்கையில் நடைபெற்ற எனது விஜயம் நிறைவுக்கு வரும் இத் தருணத்தில், மாற்றத்தின் ஒரு உண்மையான உந்துதலை நான் உணர்கின்றேன். இக் குறுகிய காலத்தினுள், நான் இலங்கையின் அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் முதல் சிவில் சமூகத்தினர் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் வரை பல தரப்பினருடன் மனித உரிமைகள் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க முடிந்தது. இந்த உரையாடல்கள், செழுமை மற்றும் பன்முகத்தன்மை கொண்ட – அத்துடன் அழகில் கண்கொள்ளா காட்சியளிக்கும் – இந் நாட்டின் முன்னேற்றத்திற்கான சவால்கள் மற்றும் வாய்ப்புகளை நான் நன்றாக புரிந்துகொள்ள உதவியுள்ளன.

முதலில், இப் பயணத்திற்கு அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பை வரவேற்று எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு மணி நேரத்திற்கு முன்பாக, ஜனாதிபதி அவர்களையும், இதற்கு முன், பிரதமர் மற்றும் பல்வேறு அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரையும் நான் சந்தித்தேன். எங்கள் உரையாடல்கள் நேர்மையானவையாகவும் சிக்கலான பிரச்சினைகளுக்கு வெளிப்படையான தீர்வுகளைக் காணும் முயற்சியையும் பிரதிபலித்தது. தலைமை நீதிபதி, தேசிய மனித உரிமைகள் ஆணையம், காணாமல் போனவர்களுக்கான அலுவலகம், இழப்பீடுகள் தொடர்பான அலுவலகம் மற்றும் தேசிய ஒற்றுமை தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அலுவலகம் ஆகியவற்றை நான் கொழும்பில் சந்தித்தேன்.

தொடர்ச்சியாக, சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளுடனும் மதிப்புமிக்க கலந்துரையாடல்களை நடாத்தியதுடன், மனித உரிமைகள் மீறல்களால் உயிர் பிழைத்தவர்களிடமிருந்தும் மற்றும் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும் இதயத்தை உருக்கும் சாட்சியங்களை நான் கேட்டறிந்தேன்.

நான் நேற்றையதினம் பார்வையிட்ட, சமீபத்தில் மீண்டும் திறக்கப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழியானது, இலங்கையில் பலரின் வாழ்க்கையை இன்னும் இறந்த காலம் பின்தொடர்கிறது என்பதற்கான ஒரு வலுவான நினைவூட்டலாக அமைந்திருந்தது. அதற்கான அனுமதி எனக்கு வழங்கப்பட்டதற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அந்த இடத்தில், இன்னும் தம் உறவை தேடிக்கொண்டு துயரத்தில் இருக்கின்ற ஒரு குடும்பத்தினரை நான் சந்தித்தேன் - இத்தனை வருடங்களின் பின்பும் அவரது எச்சங்கள் அங்கே கண்டுபிடிக்கப்படலாம் என அவர்கள் நம்புகிறார்கள் என்பதைச் சொல்வது எனக்கு வேதனை அளிக்கிறது. ஏனைய ஆயிரக்கணக்கானோரைப் போலவே, 30 ஆண்டுகளாக எதுவும் அறியப்படாமல் இருக்கும் நிலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க அவர்கள் விரும்புகிறார்கள்.

பாதிக்கப்பட்ட குழுக்கள், தங்கள் காணாமல் போன அன்புக்குரியவர்களுக்கான உண்மை மற்றும் நீதிக்காக தொடர்ந்து போராடி வருகின்றன. யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் தென்னிலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடன் நான் பேசியபோது, பல தாய்மார்களின் குரல்களைக் கேட்டேன். உதாரணமாக, தென் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பெண் 1989 இல் காணாமல் போன தன் கணவரை இன்னும் ஊர் ஊராகச் சென்று தேடி வருகிறார், அதாவது, சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய அனைவரின் கண்ணீரும் சமமானதே ஆகும்.

நேற்றய தினம் யாழ்ப்பாணத்தில் நான் கண்கொண்டது போல் - பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருவதை இட்டு நான் ஊக்கமடைந்துள்ளேன் – இந்த மாற்றம் இடம்பெற்றாலும், கடந்த காலங்களில் இடம்பெற்ற அதே முறையான மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான கண்காணிப்புகள் இன்னும் தொடர்கின்றன என அறிந்துள்ளேன். குறிப்பாக வளங்கள் குறைவாக உள்ள இடங்களில், சிவில் சமூகமானது நாட்டு வளர்ச்சியின் பங்காளிகளும் ஒரு நட்பு சக்தியுமாகும்.

கடந்த கால மரபு புதிய அரசாங்கத்திற்கு ஒரு கடினமான சவாலை முன்வைத்துள்ளது. கடந்த சில மாதங்களில் ஜனாதிபதி நிகழ்த்திய உரைகளை நான் கவனித்து ஊக்கப்படுத்தப்பட்டேன், அதில் அவர் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் பகிரப்பட்ட வலி மற்றும் துயரத்தை பொது மேடைகளில் அங்கீகரித்துள்ளார். இதை அடிப்படையாகக் கொண்டு, இந்த உணர்வுகளை கட்டியெழுப்புவதும் அன்புக்குரியவர்களின் உண்மை நிலை வெளிப்படும் வகையில் உறுதியான பதில்களை அறியத்தருவதும் அவசியமாகும். முக்கியமாக, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமையினை உறுதிப்படுத்தல் ஆகியவை அவசியமான அதேவேளை குற்றங்களை ஏற்றுக்கொள்ளுதலும் உண்மையை வெளிப்படுத்துவதும் மன ஆறுதல் அடைவதற்கும் நடந்தவற்றிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் முக்கியமான படிகளாகும்.

நம்பகமான மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கை மற்றும் உறுதிப்பாட்டைப் பெற்றுள்ள உள்நாட்டு பொறுப்புக்கூறல் முறைகளை முன்னெடுப்பதில் இலங்கை சிரமம் கொண்டுள்ளது. இதனால் இலங்கையர்கள் நீதிக்காக சர்வதேச அளவில் உதவி தேடுகின்றனர். இருப்பினும் இது அரசின் பொறுப்பாகும், மேலும் இந்த செயல்முறை தேசத்திற்கு உரியதாக இருப்பது அவசியம் - அது சர்வதேச வழிமுறைகளால் பூர்த்தி செய்யப்பட்டு ஆதரிக்கப்பட வேண்டும் என நான் நம்புகிறேன். தகவல்களைச் சேகரித்து பாதுகாக்கவும், மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களை பகுப்பாய்வு செய்யவும் எனது அலுவலகத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக ஒரு பிரத்தியேக திட்டம் நிறுவப்பட்டுள்ளது. இலங்கையிலும், சர்வதேச அளவிலும் எதிர்கால பொறுப்புக்கூறல் முயற்சிகளை ஆதரிக்க இது உதவும் என நம்புகிறேன்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் உள்ளிட்ட சில முக்கியமான வழக்குகளில் விசாரணைகள் மற்றும் வழக்குகளை மீண்டும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இவை துரித கதியில் முன்னெடுக்கப்படுவதை நான் ஊக்குவிக்கிறேன். குறைந்தபட்சம் சில நீண்டகால மற்றும் பிரதிநிதித்துவமான மனித உரிமை வழக்குகளில் முடிவுகளை அடைவது, ஒரு சக்திவாய்ந்த எடுத்துக்காட்டான விளைவையும், நம்பிக்கை அதிகரிப்பையும் ஏற்படுத்தும்.

சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கான சர்வதேச தினத்தை இன்று நாம் அனுஷ்டிக்கிறோம். போர்க் காலத்தில் சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை பெரிதும் நிலவியது – இன்றும் இத்தகைய சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. இலங்கை சட்டத்தின் கீழ் சித்திரவதை குற்றமாக்கப்பட்ட போதிலும், நாடு முழுவதும் நடைமுறையில் உள்ள சித்திரவதை பற்றிய புகார்கள் தொடர்ந்தும் பெறப்பட்டுகின்றது. எனவே, கடடமைப்பு சார்ந்த இந்த பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் பெரும் பணி நிறைவேற்றப்படவுள்ளதால், பாதுகாப்புத் துறை மற்றும் காவல்துறை சீர்திருத்தம் என்பன மிக முக்கியமானவையாக உள்ளன.

எங்களுடன் வலுவான கூட்டு உறவினை பேணும் இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் நீண்டகால பணியினை நான் அங்கீகரிக்க விரும்புகிறேன், குறிப்பாக, தடுப்புக் காவலில் இடம்பெறும் இறப்புகள் குறித்த முக்கியமான பணிகளை காவல்துறையுடன் இணைந்து அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை (PTA) உடனடியாகத் தடை செய்யுமாறும் நான் அழைப்பு விடுக்கிறேன், மேலும் நீண்டகாலமாக PTA இன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரையும் சிறைக்கைதிகளையும் பரிசீலித்து அவர்களின் விடுதலையினை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளேன். அத்துடன், இணையப் பாதுகாப்புச் சட்டமும் ரத்துச் செய்யப்பட வேண்டும்.

சமீபத்திய ஆண்டுகளில் இலங்கையில் பெண்கள் மற்றும் பாலின உரிமைகளில் முன்னேற்றங்களும் தொடர்ந்த சவால்களும் காணப்படுகின்றன. 2024 நவம்பர் தேர்தலில், 22 பெண்கள் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பெண்களின் பங்கேற்பு 9.8% என இருமடங்காக உயர்ந்துள்ளதானது கடந்த காலத்தை விட அதிகமாக உள்ள போதும், மேலதிக முன்னேற்றம் தேவைப்படுகிறது. பணியிடங்களில், ஒரே வேலையைச் செய்யும் பெண்கள் ஆண்களைவிட 27 சதவீதம் குறைவான ஊதியமே பெறுகின்றனர். பணியிடங்களில், ஒரே வேலையைச் செய்யும் பெண்கள் ஆண்களை விட 27 சதவீதம் குறைவாகவே ஊதியம் பெறுகின்றனர், மேலும், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் பரவலாக உள்ளதாக பல பெண்கள் குறிப்பிட்டுள்ளனர். கடந்த பாராளுமன்றத்தில் முவைக்கப்பட்டதாக அறியப்படும் ஒரே பாலின உறவுகளை சட்டத்தின் மூலம் குற்றமற்றதாக்குவதற்காக செய்யப்பட்ட முயற்சிகளை நான் வரவேற்கிறேன்.

இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் சர்வதேச மனித உரிமைச் சட்டத்திற்கு இணங்க திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

2022 ஆம் ஆண்டில், இலங்கையர்கள், குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள், நினைவில் நிற்கும் மிக மோசமான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டனர். தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் கடுமையான சிரமங்களைப் பற்றி அறிந்துகொண்டதில் மிகவும் வருத்தமடைந்தேன். நிலம், வீடு மற்றும் மேம்பட்ட ஊதியம் உள்ளிட்ட அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவது அவசியமானதாகும்.

2022 ஆம் ஆண்டு அரகலய போராட்டங்களிலிருந்து எழுந்த பிரபலமான கோரிக்கைகள் ஊழல் மற்றும் தவறான பொருளாதார நிர்வாகத்திற்கான பொறுப்புக்கூறல் நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்தன. இந்த விடையத்தில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் எனை ஊக்கப்படுத்துகின்றன, மேலும் இந்த நம்பிக்கையும் மாற்றத்திற்கான அலையும் முன்னேறிச் செல்வதாக நான் நம்புகிறேன்.

இது ஒரு புதிய சமூக ஒப்பந்தத்திற்கான அடித்தளமாக அமையலாம். ஒரு மனித உரிமை சார்ந்த பொருளாதார மாற்றத்திற்கான வாய்ப்பும் இங்கு உள்ளது - அது பொருளாதாரத்தை மட்டுமே கருத்தில் கொள்வதை விட, சமூகப் பிரச்சினைகளின் முக்கிய காரணங்களில் கவனம் செலுத்தி, சமத்துவமின்மை, அநீதி மற்றும் கடந்த காலத்தின் நிலைத்து நீடிக்க முடியாத நடைமுறைகள் போன்ற சிக்கல்களையும் நிவர்த்தி செய்கிறது.

இராணுவத்தால் இன்னும் ஆக்கிரமிக்கப்பட்டு பொருளாதார ரீதியாகப் பயன்படுத்தப்படும் நிலங்களை விடுவிப்பதன் முக்கியத்துவத்தையும், தொல்பொருள், மத மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட நில விவகாரங்களை உள்ளூர் சமூகங்களுடன் கலந்தாலோசித்து தீர்ப்பதன் முக்கியத்துவத்தையும் நான் வலியுறுத்தினேன். முஸ்லிம்கள் விரும்பும் பட்ஷத்தில் அவர்களின் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கான வசதி செய்து தரப்பட வேண்டும்.

மதத் தலைவர்களுடனான எனது சந்திப்புகளின் போது, மனித உரிமைகள் மற்றும் மதங்களுக்கு இடையிலான புரிதலை மேம்படுத்துவதில் அவர்கள் வகிக்கும் முக்கிய பங்கை நான் வலியுறுத்தியுள்ளேன். இது ஒரு அமைதியான, நல்லிணக்கமான மற்றும் நெறிமுறை சமூகத்திற்கான முக்கிய அங்கமாகும். மத

அடிப்படையில் வெறுப்புணர்ச்சியைத் தூண்டும் பேச்சுகளும் தூண்டுதல்களும் அதிகரித்து வரும் இந்த உலகில், இதை ஒழிக்க அவர்களின் செல்வாக்கைப் பயன்படுத்துமாறு நான் அவர்களை கேட்டுக்கொண்டேன்.

புதிய அரசானது "தேசிய ஒற்றுமை" எனும் அடிப்படை குறிக்கோளை நிர்ணயித்துள்ளது. நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு விரைவான வெற்றிகளும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகளும் முக்கியமானவையாகும். இந்த விடயத்தில் தேவைப்படும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் எனது அலுவலகம் தயாராக உள்ளது.

இலங்கை அரசாங்கம் மற்றும் சிவில் சமூகம் ஆகிய இரு தரப்பினரிடையேயும் இனம், மதம், மொழி, பண்பாடு, சாதி மற்றும் வர்க்கம் போன்ற ஆழமாக வேரூன்றிய அடையாள அரசியலுக்கு ஒரு தடைக்கோடு போட வேண்டும் எனும் தெளிவான விருப்பம் உள்ளது என்ற வலுவான நம்பிக்கையுடன் நான் இங்கிருந்து புறப்படுகிறேன்.

கவலைதரும் வகையில், போர்கள், பொருளாதார இஸ்திரமற்ற தன்மை மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்றவை பொதுவான நிகழ்வுகளாக மாறிவரும் இந்தக் காலகட்டத்தில், இலங்கை ஒரு நம்பிக்கையின் கூற்றாக மாற வேண்டும் என நான் விரும்புவதுடன், அரசுடனான மிகவும் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை எதிர் பார்க்கிறேன். அமைதியான சகவாழ்வு, மற்றவரைப் புரிந்துகொள்ளுதல், சகிப்புத்தன்மை, வேறுபாடுகளை அங்கீகரித்தல், அதே நேரத்தில், பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்தல் அதை இந்த நாட்டின் செழுமையான வண்ணத்திரையின் வலிமையாகக் காணல் ஆகியவற்றுக்கு இன் நாடு ஒரு முன்மாதிரியாக நிச்சயமாக உருவாக முடியும்.

-முற்று-